**வலப்பனே பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலப்பனே பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலப்பனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்கு எதிராக 04 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வநத போதும் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாதாக | நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) நிதி முறைகேடு காரணமாக உத்தியோகத்தரொருவரிடமிருந்து ரூபா 3,660,000 தொகையை அளவிடுவதற்கு பரிசோதனை நடைபெற்று பூர்த்தி செய்யப்படும் வரை வைப்பு பதிவேட்டில் நிறுத்தி வைக்கப்பட்டு காணப்பட்ட போதும் நிதி முறைகேடு தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாதாக | நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 45 மற்றும் 46 ஆம் இலக்க நாட்குறிப்புகள்னி பிரகாரம் மூலதன மானியக் கணக்கின் கூட்டுத்தொகை ரூபா 10,211,726 செலவு பதிவு இடப்பட்டிருந்த போதும் ரூபா 10,311,726 தொகையை வரவு வைக்கப்பட்டு ரூபா 100,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது | 2023 இன் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்னைய ஆண்டில் ரூபா 1,518,000 ஆன கடன் கொடுத்தோர் ஆக்கப்பட்ட செயற்திட்டமொன்று மீளாய்வு ஆண்டின் போது இரத்துச் செய்யப்பட்டு இருக்கையில் தொடர்ந்தும் கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய 2023 ஆம் ஆண்டில் போது 14 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 1,500,176 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2023 இன் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும் |
| (இ) | முன்னைய ஆண்டுக்குரிய பெற வேண்டிய முத்திரை கட்டண வருமானமாக கணக்கில் செய்யப்படாதிருந்த ரூபா 3,538,950 தொகை மீளாய்வாண்டில் கிடைக்கும்போது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,737,500 22 திரண்ட நிதியத்திற்கும் ரூபா 1,801,450 ஆண்டில் வருமானத்துக்கும் செலவு வைக்கப்பட்டிருந்தது | 2023 இன் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | முன்னைய ஆண்டுக்காக கிடைத்திருந்த ரூபா 4,487,160 ஆனால் முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கருதி கணக்கிடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக பெற வேண்டிய முத்திரை கட்டணங்கள் ரூபா 581,950 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டது | 2023 இன் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் சீராக்குவதற்காக நடவடிக்கை எடுப்பதாக | நிதிக்கூற்றுக்களில் பெறுமதிகள் சரியாக இனங் காணப்பட ாக வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 116,168 ஆன நீதிமன்ற தண்டப்பண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 இன் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது குறித்த பெறுமதியை கணக்கீடு செய்வதாக | நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | பொது வைப்புக்களின் கீழ் கணக்கு வைக்கப்படவேண்டிய ரூபா 2,408,534 ஆன தடுத்து வைத்தல் கட்டணங்கள் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | குறைபாடுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு சீராக்கப்பட வேண்டும் |
| (எ) | களஞ்சியம் முற்பணக் கணக்கு முறையினை பின்பற்றப்படாமல் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 272,490 ஆன இருப்புக்கள் ஆண்டின செலவினத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது | கணக்கு வோட் அடிப்படையில் வைக்கப்பட்டு வருவதுடன் முற்பண முறைமை தற்போது செயற்படுத்தப்பட வில்லை என்பதாக | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை - | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படும் 03 கணக்குகளுக்குரிய ஆரம்ப புத்தகங்கள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 24,671 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் இணக்கமின்மை 2023 இன் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,384,452 ஆன 12 கணக்கு மீதிகள் சொத்தப் பதிவேடுகள் மற்றம் அட்டவணைகள் சமர்ப்பிக்கப் படாமையால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | 2023 இன் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மீதிகளை உறுதிப்படுத்துதற்கு உரிய அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) பாராளுமன்ற சட்டங்கள் | | | |
| 1988 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 4 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் | மீளாய்வாண்டிற்காக 11 வியாபாரங் களுக்குரிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை | இடப்பரிசோதனைகள் செய்யப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| 1988 மே 17 ஆம் திகதிய 1988/22ஆம் இலக்க சுற்றறிக்கை | வீதவரிக்காக ஆதனங்கள் மதிப்பீடு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பிரதேச 2011 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு மீளாய்வாண்டில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது | திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதும் இதுவரை மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை என்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,153,885 ஆக இருந்ததுடன், அதற்கு அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,785,248 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு- | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின இறுதி திகதியில் உள்ளவாறு 03 நடைமுறை கணக்குகளின் காசெட்டின் பிரகாரம் மீதி ரூபா 17,087,707 காணப்பட்ட போதும் மிகை மீதிகளை பிரதேச அபிவிருத்திக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் காணப்படும் மீதிகளை கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் அத்தொகையை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக என்பதாக | மிகை மீதிகளை பிரதேச அபிவிருத்திக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காலாவதியான ரூபா 187,445 ஆன 02 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ)பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிதிப் பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,877,000 | 4,768,063 | 5,327,808 | 3,663,504 | 2,877,000 | 5,218,040 | 2,587,032 | 4,223,249 |
| (ii) | வாடகை | 11,518,000 | 16,184,257 | 2,855,586 | 20,429,782 | 11,449,225 | 5,508,577 | 11,787,174 | 7,101,111 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 4,456,000 | 2,959,854 | 2,959,854 | - | 4,456,000 | 3,190,480 | 3,416,097 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 91,103,000 | 14,309,041 | 19,149,245 | 2,660,778 | 88,549,000 | 5,065,540 | 80,556,921 | 7,500,982 |
| | | 109,954,000 | 38,221,215 | 30,292,493 | 26,754,064 | 107,331,225 | 18,982,637 | 98,363,923 | 18,825,342 |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு- | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | 2022 ஜனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 2,106,298 ஆன நீர் நிலுவை வீத வரிகள் காணப்பட்டதுடன் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் ரூபா 887,778 ஆக அதாவது 42 சதவீதமாக மாத்திரம் இருந்ததால் வீத வரி அறவீட்டின் முன்னேற்றம் போதியளவு மட்டத்தில் காணப்படவில்லை | நிலுவையை பகுதி பகுதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிலுவை தொாகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| i | 4 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து நிலுவையாக காணப்படும் வலபப்பனே, ராகல, பதியபலல்ல பொது வியாபார நிலையங்களில் 24 கடைகளில் ரூபா 5,520,389 ஆன நிலுவை வாடகை மற்றும் 1989 முதல் 2009 வரையான காலப்பகுதிக்குரிய 25 இறைச்சி, மீன் கடைகளிலிருந்து ரூபா 1,250,150 ஆன நிலுவை வாடகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை | 1087 முதல் 2019 வரை காணப்படும் நிலுவைகளை அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் பதவழிப்பதற்காக அங்கீகாரத்துக்கு அனுப்புவதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| ii | ராகல மற்றும் வலப்பனே வாரச் சந்தையின் குத்தகையாளர் களிடமிருந்து 03 ஆண்டு முதல் 35 ஆண்டு காலப்பகுதியிலிருந்து மொத்தம் ரூபா 848,937 ஆன குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | கருத்து வைத்திருக்கவில்லை | நிலுவை குத்தகை வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்<br>------------------------------------------------------- | | |
| | மீளாய்வாண்டில 55 வியாபாரங்களுக்குரிய வியாபாரம் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக ரூபா 55,200 ஆன வருமானம் சபைக்கு இழக்கப்பட்டு இருந்தது | 2013 ஆம் ஆண்டுக்குரிய அறவிடவேண்டிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அனைத்தும் வியாபாரங்களில் இருந்து அதை விடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அனுமதிப்பத்திர கட்டணங்கள் அறவிட பெறவேண்டும் |
| (ஈ) | ஏனைய வருமானம்<br>------------------------------ | | |
| i | மோட்டார் வாகன நிறுத்துமிடம் கட்டணங்கள் மற்றும் பொது மலசல கூடங்களின் குத்தகை | நிலுவையை அறவிடு வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா 412,334 தொகை 2 ஆண்டுகள் முதல் 8 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் நிலுவையாக காணப்பட்டது | | வேண்டும். |
| ii | அதிகார பிரதேசத்தின் விளம்பர பதாகைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது ரூபா 131,364 ஆன விளம்பர கட்டணங்கள் அறியப்பட்டிருக்கவில்லை | விளம்பர பதாகைகளுக்காக இதுவரை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் கடிதங்கள் மூலம் உரியவர்களுக்கு தெரியப்படுத்தி அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையாக கணிப்பீடு செய்து கட்டணங்கள் அளவிட வேண்டும் |
| (ஈ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்<br>----------------------------------------------- | | |
| | மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,219,778 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,441,000 ஆக இருந்தது. . | சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைகளுக்காக மாத்திரம் தற்போது பணம் கிடைத்துள்ளதாக | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை சட்டத்தின் 79 முதல் 54 ஆம் பிரிவுகளுக்கு இணங்க சபை அதிகார பிரதேசத்தில் பொதுக் வாடிகாண்கள் நிர்மாணிப்பதற்கும் திருத்தி அமைப்பதற்கும் வடிதாண் தொடர்பான பொதுவான கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகள் சபையால் நிறைவேற்றப்பட்டு இருக்க வில்லை. | அபிவிருத்தி நிகழச்சிகள் முன்மொழியப்படாதிருந்ததுடன் நிதி ஏற்பாடு செய்யப்படவில்லை. | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 27 முதல் 33 வரை பிரிவுகளின் பிரகாரம் மீனாய்வாண்டில் ஒழுங்கைகள் நிர்மாணம் மற்றும் மேம்படுத்துவதற்காக சபை நிதியத்திலிருந்து பணம் ஈடுபடுத்தப்பட்டு இருக்கவில்லை | | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் |
| (இ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 95 பிரிவு மல போக்குவரத்து மற்றும் கழிவுப்பொருள் சேகரிப்புக்காக சபையின் கலி வண்டி ஒன்று சபைக்கு சொந்தமாக இல்லாத இருந்தமையால் இச்சேவைகளை நிறை வேற்றுவதற்கு முடியாமலிருந்தது. | கலி வண்டி ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டு உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் |
| (ஈ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 108 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் பிரதேச சபையால் சுத்திகரிக்கப்படாமல் குடிநீர் விநியோகிக்கப் பட்டிருந்ததுடன் நீர்மானி பொருத்தமாமல் நிலையான வைப்பொன்று அறவிடப்பட்டிருந்தது. | சமூக நீர் அமைப்பொன்றுக்கு இந்நீர் முனமொழிவு முறைமையை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக | சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 73 களஞ்சியத் தொகுதிகள் சபைக்கு சொந்தமான ராகல மற்றும் குருபானவெல ஆகிய 2 ஆயுர்வேத நிலையங்களின் இறுதி இருப்பின் பெறுமதி மற்றும் 11,950 கிலோ கிராம் உரங்கள் என்பவற்றின் பெறுமதி கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | ஆவணங்களை பரீட்சித்து பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு 2003 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட மொத்தம் ரூபா 2,056,475 ஆன 4 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் 10 வாகனங்கள் 01 ஆண்டு முதல் 12 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் விளைவற்றும் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டன. | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பொருட் கணிப்பீட்டின் மூலம் அவற்றை கைதவிர்ப்பதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் உப அலுவலகங்கள், நூலகங்கள் மற்றும் 6 சனசமுக மண்டபங்கள் 4 இறைச்சிக் கடைகள் கழிவுப்பொருட் தொகுதிக கட்டிடங்கள் முறையான பராமரிப்பின்றி திருத்தம் செய்யாமல் சிதைவடைந்து காணப்பட்டன | சபையின் நிதி நிதி ஏற்பாடுகள் போதிய அளவு இல்லாமையே இதற்கு காரணமாக உள்ளதாக | திருத்தி பராமரித்து பயன்படுத்த வேண்டும |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓய்வுபெற்ற வேலையில் இடை நிறுத்தம் செய்யப்பட்ட சேவையை விட்டுச்சென்ற மற்றும் மரணித்த 19 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 611,668 ஆன கடன் மீதிகள் அறவிட ப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும் |

### 3.6 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மண்சரிவு காரணமாக பெக்கோ இயந்திரம் 2018 நவம்பர் 07 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டு அதனை உரிய நிலைமைக்கு கொண்டு வருவதற்காக 2019 ஜூலை 09 ஆம் திகதி மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இயந்திர பொறியியலாளர் அலுவலத்தின் வேலை தளத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள போதும் 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி வரை அதனை திருத்தி சபைக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | திருத்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அதனை சபைக்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திருத்த வேலைகளை பூர்த்தி செய்தல் வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 08 செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 06 வருமான விடயங்களில் 09 சதவீதம் முதல் 49 சதவீதம் வரையிலும் 05 செலவின விடயங்களில் 12 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | 2024 இன் பாதீடு தயாரிக்கும் போது பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாட்டினை திட்டவட்டமாக இனங் கண்டு கவனமாக பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |

### 4.3 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவு பொருள் தொகுதியைச் சுற்றி கம்பி வேலி பூரணமாக இல்லாமையால் வனவிலங்குகளின் சேதம் ஏற்படுவதாக கண்டறியப்பட்டதுடன், திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவம் இல்லாமல் கழிவுகள் திறந்த சந்தையில் விடுவிக்க வெளியேற்றப்பட்டு இருந்தன | கழிவு தொகுதியின் ஈக்கள் நுளம்புகள் நாசினிகள் தெளித்து பேல் இயந்திரம் மற்றும் க பேல் ளஞ்சியப்படுத்தி உள்ள அறைகள் முறைப்படுத்தப்பட்டு நுழைவு வீதி மற்றும் அதனைச் சுற்றி அலங்காரமாக அமைப்பதாக | கழிவுப்பொருள் முறைமையாக முகாமைப்படுத்த வேண்டும். |

### 4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை | இவ்வாண்டில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்காக தேவையான நிகழ்சிசகளை சபையினால் செயற்படுத்துவதற்காக தேவையான நடடிக்கைகளை எடுப்பதாக | சட்ட நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |